## இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

## இந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி (ISRF)

## திட்டத்துக்கான விண்ணப்பம்கோரல்

இந்திய அரசின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திணைக்களம் (DST) இந்திய விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி பயிற்சி (ISRF) திட்டத்துக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது நட்பு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்தியாவில் இருக்கும் பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் 3-6 மாதங்கள் வரையிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குகிறது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திணைக்களம் (DST) இதற்கான போக்குவரத்து, வாழ்க்கைச் செலவு மற்றும் தற்செயல் செலவீனங்கள் ஆகியவற்றை இத்திட்டத்தீன் கீழ் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் இலங்கையை நிரந்தர வதிவிடமாக கொண்டிருக்கும் அதேசமயம் அந்நாட்டிலுள்ள பல்கலைக் கழகம் அல்லது ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றில் பொறியியல் மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள் உள்ளிட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார் ஆய்வு அல்லது ஆய்வுகளில் தற்போது ஈடுபட்டிருக்கவேண்டியது அவசியமாகும். அத்துடன் Ph.D/ M. Tech/ M.Sc/ MBBS ஆகிய தகுதிகளுடன் கற்பித்தல் அல்லது ஆய்வில் 3-5 வருட அனுபவத்துடன் 45 வயதுக்கு (31 டிசம்பர் 2019 இல்) குறைந்தவர்கள் இந்த திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும். Ph.D க்காக சொந்த நாட்டில் பதிவு செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

ISRF திட்டத்துக்காக விண்ணப்பிக்க விரும்புவோர் CCSTDS இணையத்தளம் (www.ccstds.tn.nic.in), DST இணையத்தளம் (www.dst.gov.in) ஆகியவற்றிலிருந்து விண்ணப்ப படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும்.

முற்றாக நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவங்களை தேவையான ஆவணங்களுடன் பணிப்பாளர் (சர்வதேச உறவுகள்), தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவு, விஞ்ஞான தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய, நிலை 01, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தபாலில் அல்லது motrtrd@gmail.com என்ற இ-மெயிலுக்கு 2020 பெப்ரவரி 28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கவும்.

கொழும்பு
06 ஜனவரி 2020